# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS. 33 of 2022 | **PW - 1** | **:** | cross continuation |
| **Name** | சண்முகம் | **Father Name** | **:** | சின்னசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24.02.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் - 03.13 PM**

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

5. இரண்டாம் பிரதிவாதி வரதம்மாள் எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் கோமாளிப்பட்டி என்ற ஊரில் குடியிருந்து வருகிறார். கடந்த 23.04.2021 தேதியில் எனது தந்தை ஏற்படுத்தி கொடுத்த தான பாத்திரத்தின்படி அன்றைய தேதியில் இருந்து தான சொத்துக்களை இரண்டாம் பரிதிவாதி வரதம்மாள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு தான பத்திரம் ஏற்பட்ட பின்பு தான் மொரப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்டது அந்த பாகப்பிரிவினை ஏற்படும் சமயத்திலேயே தானப்பத்திரம் குறித்த விவரங்கள் எனக்கும் மூன்றாம் பிரதிவாதிக்கும் நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல தெரியாது. நான் மூன்றாம் பிரதிவாதி கல்பனாவுக்கும் வழக்கு நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல அவரும் என்னுடன் தான் உள்ளார். மீனாட்சி யாருடன் உள்ளார் என்றால் அவரும் என்னுடன் தான் உள்ளார். அவர் எந்த சர்வே எண்ணில் குடியிருந்து வருகிறார் என்றால் கிராமத்தில் உள்ள எனது உறவினர் வீட்டில் குடியிருந்து வருகிறார். பாக ஆவணத்தில் இரண்டாம் பிரதிவாதி வரதம்மாள் ரூபாய் 5000 பணம் பெற்றுக் கொண்டார் என்று எழுதி உள்ளது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. நானும் மூன்றாம் பிரதிவாதியும் சேர்ந்து எனது தந்தை இரண்டாம் பிரதிவாதி வரதம்மாளுக்கு எழுதிக் கொடுத்த தான பத்திரத்தின்படி வந்த சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்று தான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் இந்த வழக்கில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. தான பத்திரத்தின்படி வரதம்மாளுக்கு வந்த சொத்துக்களில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை நாங்கள் தாவா சொத்தில் கோரியுள்ள பாகம் எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல தாவா தள்ளுபடி செய்யப்பட

வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் கூறியுள்ள வழக்கு மூலம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருவதால் இந்த வழக்கிற்கு ஏற்பட்ட செலவினங்களை இரண்டாம் பிரதிவாதிக்கு நான் செலுத்த கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

**முடிவு நேரம் –03.21 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.